**மதுராவல பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மதுராவல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,919,489 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப்சளைத் தளம் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் ஹியூம் குழாய் இருப்பு மீதி ரூபா 45,720 இனால் குறைவாகவும், செலவினம் ரூபா 45,720 இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | கூட்டுப்சளைத் தளம் திருத்தும் செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினத்தை கணக்கீடு செய்யும் போது வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 207,272 இனால் அதிகரித்தும் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | திரண்ட நிதியக் கணக்கு ரூபா 207,272 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புளத்சிங்ஹள பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,853,309 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்டாதிருந்ததுடன் புளத்சிங்ஹள பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 221,804 தொகை காண்பிக்கப்படடிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மூலம் புளத்சிங்ஹள பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டிய, செலுத்த வேண்டிய மீதிகளைத் திருத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டு திருத்தப்படும். |
| (v) | கூட்டுப்சளைத் தளத்தில் கழிவு நீர் முறைமையொன்றைத் தயாரிக்கும் வேலையின் மூலதனச் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 170,036 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்கில் சரிசெய்யப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 54,838,609 தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 11,808,538 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை ஒப்பீடு செய்து கணக்குகளை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணி கட்டிடங்களின் பெறுமதி ரூபா 157,966,405 ஆக இருந்த போதிலும் அதற்குரிய பட்டோலையில் பெறுமதி காண்பிக்கப்படாமையின் காரணமாக கணக்கு மீதியையும் பட்டோலையின் மீதியையும் இணக்கஞ்செய்ய முடியாதிருந்தது. | காணி கட்டிடங்களின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்து பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | காணி கட்டிடங்கள் மீள் மதிப்பீடு செய்து பெறுமதி நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகக்கப் படும். |

**(இ)** **கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கை என்பன இல்லாமையினால் ரூபா 159,536,122 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களுடன் சான்றுகள் சமர்ப்பிக்கப்படும். |

**1.4** **இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் | | | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதிகளில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களின் ஆதனவரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 154(1) ஆம் பிரிவு | 549,695 | கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட இரண்டு காணிகளில் ஒரு சதவீதத்திற்குச் சமமான வரி அறவிடப்படவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 160 ஆம் பிரிவு | 313,574 | நிலுவை ஆதனவரி அறிவிடலின் இறுதிப் படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | - | சபைக்குச் சொந்தமான சகல காணியும் கட்டிடங்களும் ஆண்டிற்கு ஒருமுறையேனும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.9.1 ஆம் பிரிவு | 604,471 | சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக நேர் ஒப்பந்த முறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களைத் தெரிவு செய்வதற்கு உரிய திணைக்களத்தின் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெரிடப்பட்ட இரு அங்கத்தவர்களைக் கொண்ட குழுவினால் சங்கமாக சிபாரிசு செய்யவேண்டியிருந்த போதிலும் இரண்டு ஒப்பந்தங்களுக்கு அந்த தகைமைகள் பரீட்சிக்காமல் சங்கம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | ஆதன வரிகளின் கீழ் வருகின்ற ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யவேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (உ) | 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 2052 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி | 77,250 | 30 அறிவித்தல் பதாதைகளில் இருந்து அறவிட வேண்டிய கட்டணம் அறவிடப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரியான கட்டணம் அறவிடப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,262,899 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,937,048 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,322,992 | 1,408,443 | 1,084,556 | 524,229 | 1,585,450 | 1,411,620 | 1,285,106 | 213,883 |
| (ii) | வாடகை | 333,500 | 245,450 | 356,741 | - | 325,550 | - | 313,940 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 14,635,930 | 10,500,000 | 9,163,990 | 22,852,583 | 13,627,600 | 10,500,000 | 11,928,359 | 17,255,583 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

#### (அ) வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 369,666 ஆக இருந்ததுடன் 2019 ஏப்ரல் 30 வரையில் அதில் ரூபா 103,280 தொகை அதாவது 28 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் பிரதான அலுவலகத்தின் ஆதனவரி நிலுவையில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நிலுவை ரூபா 91,713 ஆகும். | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஆதனவரி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

#### (ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நீதிமன்றத் தண்டப்பணம் | | |
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,897,583 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதியில் ஆண்டில் ரூபா 3,000 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது.<br>மீளாய்வாண்டிற்காக ரூபா 500,000 தொகை சிட்டையிடப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் பண வருமானம் ரூபா 5,394,583 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ரூபா 5,394,533 தொகையான நிலுவைப் பணத்தில் ரூபா 818,988 தொகை 2019 பெப்ரவரி 08 ஆந் திகதியளவில் அறவிடப்பட்டுள்ளது. |
| (ii) முத்திரைக் கட்டணம் | | |
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 12,358,000 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ரூபா 249,406 தொகையான நிலுவைப் வருமானத்தைப் |

| | | |
|---|---|---|
| மீதியில் ஆண்டில் எந்தவொரு தொகையும் கிடைத்திருக்கவில்லை. ஆண்டின் சிட்டையிடல் ரூபா 10,000,000 ஆக இருந்ததுடன் அந்தத் தொகையில் ரூபா 4,900,000 முற்பணம் மாத்திரம் ஆண்டில் கிடைத்திருந்தது. | | பெற்றுக் கொள்வதற்காக மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு பட்டோலை அனுப்பப்பட்டிருந்ததுடன் மீகுதி தொகையை அறவிடுவதற்கு பட்டோலை தயாரிக்கப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | உப விதிகள் | | |
| | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 12 பிரதான விடயங்களுக்காக மாத்தரம் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விதிக்கப்பட்டுள்ள உப விதிகள் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| (i) | 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்த செயற்பாடுகளின் செயல்முன்னேற்றத்தை அளவிடும் முறைமையொன்று காணப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதனக் கிரயம் ரூபா 79.8 மில்லியனுக்குரிய கட்டுநிதித் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,765,000 கிரயமான 15 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு<br>---------------------------------------------------------------- | | |
| | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந்த நோக்கங்களுக்காக புதிய பூகோள குறிகாட்டிகளில் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதார முன்னேற்றம் என்பவற்றுக்கான குறுங்கால மற்றும் நீண்ட காலத் திட்டம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு குறிப்பாக பொறுப்புக்கள் கையளிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான நீண்ட காலத் திட்டம் தயாரிக்கப்பட்டு குறிப்பாக பொறுப்புக்கள் கையளிக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவு படுத்தியதன் பின்னர் நிலைபேறான அபிவிருத்தி திட்டம் 2019 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்
----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கெப் வண்டி தொடர்பாக 2016 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வாகன விபத்திற்குரியதாக தெஹிவள கல்கிஸ்ஸ இயந்திரப் பொறியியலாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி நட்டம் ரூபா 1,134,037 தொகை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதி நட்டம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை தீர்மானிப்பதற்காக மிகுதி நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக உள்ளூராட்சி அணையாளரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை | | |
| (i) | வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவியின் வேலை மேவுகைக்காக முகாமைத்துவ உதவியாளர் தரம் 1 இன் உத்தியோகத்தர் 2017 யூன் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்டிருந்தார். | செயலாளர் பாதவிக்காக முகாமைத்துவ உயர் தரத்தின் உத்தியோகத்தர் சேர்க்கப்பட வேண்டும். | பதயணியனர் தகவல்கள் சமர்ப்பிக்கும் காலாண்டு அறிக்கையில் வெற்றிடங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | சபையில் 01 நூலகர் பதவி, 02 வருமான பரீட்கர் பதவிகள், ஒரு சுகாதார மேற்பர்வையாளர் மற்றும் ஒரு சாரதிப் பதவி வீதமும், 04 அலுவலக உதவியாளர் பதவிகளும், ஒரு பாதுகாவலரும், ஒரு நூலக உதவியாளரும், 02 முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியரும் மற்றும் இரண்டு களத் தொழிலாளர்களும் வெற்றிடமாகக் காணப்பட்டனர். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும் | எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஊழியர் கடன் | | |
| | ஓய்வுபெற்ற மற்றும் இடம்மாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 85,750 தொகையான கடன் மீதி பல வருட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 3,104,471 பெறுமதியான 04 வேலைகளில் 02 வேலைகளுக்காக வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் ஏனைய 02 வேலைகளுக்காக வடிவமைப்பு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு முன்னர் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும் | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதிருக்க கண்காணிக்கப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4.2 மாகாண கணக்குகள் செயற்குழுவின் தீர்மானங்கள் அமுல்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 யூன் 26 ஆந் திகதி நடைபெற்ற மாகாண கணக்குகள் செயற்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 2.3 , 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 2.5(இ)(i) மற்றும் (ii) , 2.6 மற்றும் 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 1.1.2 பந்திகள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த கட்டளை 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படவில்லை. | மாகாண கணக்குகள் செயற்குழுவின் கட்டளை அமுல்படுத்தப்பட வேண்டும். | மாகாண கணக்குகள் செயற்குழுவின் கட்டளைகளுக்குரிய அறிக்கையொன்று மாகாண கணக்குகள் செயற்குழுவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |